INTERNATIONAL JOURNAL OF NOVEL RESEARCH AND DEVELOPMENT (IJNRD)
© 2026 IJNRD | Volume 11, Issue 8, August 2026 | ISSN: 2456-4184 | IJNRD.ORG

# குறிஞ்சிக்கலி மக்களின் அக வாழ்க்கை முறை - ஓர் பார்வை

**முனைவர் கா.சுமித்ரா**
**தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்**
**அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**பண்டுதகாரன்புதூர் மண்மங்கலம் கரூர் - 06**

**ஆய்வுசுருக்கம்**

சங்க இலக்கியங்கள் பண்டைய தமிழர்களின் வரலாற்றை அறிய உதவும் களஞ்சியமாக திகழ்கின்றன இவற்றுள் கலித்தொகை சிறப்பான நூலாக கருதப்படுவதற்கு இதன் அகவாழ்க்கை முறையும்,யாப்பு முறையும் சொல்லாட்சி முறையும், நாடகப் பாங்கும் அடிப்படைகளாகின்றன. கைக்கிளைக்குரிய பாடல்கள் கலித்தொகையில் மட்டுமே அமைந்துள்ளன. குறிஞ்சிக்கலியில் கபிலர் வரைவுகடாதலை மிகுதியான பாடல்களில் கூறியுள்ளார். இதற்கேற்ற வகையில் தோழிக் கூற்றுப் பாடல்களே அதிகமாக இடம்பெற்றுள்ளன.

குறிஞ்சிக்கலி பாடல்களை நோக்குமிடத்து கபிலருக்கு குறிஞ்சி நிலத்தின் மீதுள்ள ஈடுபாடும், ஆழ்ந்த புலமையும், கற்பனைத் திறனும் இயற்கையின் எழில் நலத்தை வெளிப்படுத்தும் கலையுணர்வும், நுண்ணறிவும் வெளிப்படுகின்றன. இவை குறிஞ்சிக்கலிக்கு வலிமை சேர்க்கின்றன.

**முக்கிய சொற்கள்**

யாப்பு முறை, சொல்லாட்சி முறை, களவு, கற்பு, பாங்கி,பாங்கன்

**முன்னுரை**

கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி. இத்தகைய சிறப்புமிக்க தமிழர்களது வாழ்வில் மரபு முறையான பண்பாடுகளும் பழக்கவழக்கங்களும் வழிவழியாக பின்பற்றப்பட்டு வருகின்றன இவை ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்த தலைமுறைக்கு செல்வதற்கு இலக்கியங்களே சிறப்பான கருவிகளாக அமைகின்றன இந்த வகையில் சங்க கால குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கை முறையானது பின்வருவருக்கும் வழிகாட்டியாக திகழும் பான்மையை கபிலர் கலித்தொகையில் இடம் பெற்றுள்ள குறிஞ்சிக்கலியின் கண் விளக்கி உள்ளார். இதனை ஆராய்ந்து உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நோக்கம்**

இன்றைய சமூகத்தினருக்கும் சங்க கால மக்களின் உயரிய வாழ்வியல் கோட்பாடுகளை உணர்த்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்வாய்வு பகுப்பு முறை திறனாய்வு, விளக்க முறைத் திறனாய்வு எனும் இரண்டின் அடிப்படையில் அமைந்துள்ளது. மேலும் தேவையான இடங்களில் ஒப்பீட்டு அணுகுமுறையும் கையாளப்பட்டு தொடர்புடைய ஆய்வு நூல்கள், துணைமை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**குறிஞ்சிக்கலியில் அகவாழ்க்கை முறை**

சங்க இலக்கியங்கள் மக்களின் அகவாழ்க்கை முறையை சிறப்பாக நவில்கின்றன. அக வாழ்க்கையில் களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கை என இரண்டாக பகுத்தாராயலாம். தொல்காப்பியர் கூறியுள்ள அகத்திணையில் களவியல் மற்றும் கற்பியல் இலக்கணங்களுக்கு உட்பட்டனவாய் இவை திகழ்கின்றன. அத்தகைய இலக்கண விதிகளுக்கு ஏற்ப சங்க கால தமிழர்களின் அகவாழ்க்கை முறைகளையும் சிறப்புகளையும் குறிஞ்சிக்கலியில் கபிலர் நயம்பட கூறியுள்ளார்.

**அகம் விளக்கம்**

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருட்களுள், இல்லற வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது இன்பமாகும். அவ்வின்பமே அகத்திணை என்று வழங்கப்படுகிறது. பல்வகைப் பண்புகளால் நிரம்பப்பெற்ற தலைவனும், தலைவியும் இரண்டறக் கலந்து இன்பம் பெறுகின்றனர்.அவ்வின்பம் பிறருக்குப் புலப்படுத்த முடியாததாய், தம் இருவர் உள்ளத்தால் மட்டும் உணர்த்தக்கதாய் அமையக்கூடியது இத்தகைய அகவாழ்க்கையினைத் தொல்காப்பியர்,

**"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**

**முற்படக் கிளந்த எழுதிணை என்ப " 1**

என்று ஏழு திணைகளாகப் பகுத்துக் கூறியுள்ளார். இவற்றில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற நடுவண் ஐந்திணையும் அன்பின் ஐந்திணை என்று சிறப்பிக்கப்படுகிறது. இவையே அகப்பொருளுக்கு சிறப்பை சேர்க்கின்றன.

சங்க அக இலக்கியங்களின் வழி தலைவன், தலைவியின் காதல் வாழ்க்கையினையும், அவர்களின் காதல் வாழ்விற்கு துணையாக அமையும் பாங்கன், பாங்கியின் செயல்பாடுகளையும் அறிய முடிகின்றது. தலைவனின் காதல் நிலையினை சோதித்து அறியும் தோழியின் மதிநுட்பம் பல்வேறு இடர்பாடுகளையும் கடந்து தலைவியை களவில் கூடும் தலைவனின் செயல், களவினை அறத்தோடு நின்று பெற்றோர்க்கு உணர்த்தும் தோழியின் செயல், மணம் செய்யும் முறை போன்றவற்றையும், பெற்றோர் திருமணத்திற்கு உடன்படாதபோது தோழி தலைவியையும், தலைவனையும் உடன்போக்கில் அனுப்புதல், உடன்போக்கிற்குப் பின் தாயினைத் தேற்றுதல், கற்பின் சிறப்பு நிலையை உணர்த்துதல்

போன்ற பல்வேறு படிநிலைகளைக் கொண்டதாய் அகவாழ்க்கை முறை சிறப்பாக அமையும் பாங்கினை சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

**களவு நிலை**

தலைவனும் தலைவியும் காதலால் ஒருவரை ஒருவர் சந்தித்து நெஞ்சம் கலந்து காதலால் கட்டுண்டு உள்ளப்புணர்ச்சியும், மெய்யுறு புணர்ச்சியும் பெறுவர். இதனையே களவொழுக்கம் என இலக்கியங்கள் வழங்குகின்றன. இதன் இலக்கணத்தை,

**"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**

**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**

**காமக்கூட்டம் காணுங் காலை**

**மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள்**

**துறையமை நல◌்யாழ்த் துணைமையோர் இயல்பே" 2**

என்று தொல்காப்பியரும்,

**"உளமலி காதல் களவுஎனப் படுவது**

**ஒருநான்கு வேதத்து இருநான்கு மன்றலுள்**

**யாழோர் கூட்டத்து இயல்பினது என்ப"3**

என்று நம்பியகப் பொருளும் உரைக்கின்றன.

**"காதல் திருமணம் நிகழும் முன்னர் தலைவனும் தலைவியும் தாமே சந்தித்து ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொண்டு பிறர் அறியாமல் பழகுதலும் இன்ப வாழ்வை நடத்துதலும் களவு எனப்படும்".4**

தலைவன் ஒருநாள் வேட்டையாடிக்கொண்டு விலங்குகளின் அடிச்சுவட்டை தேடுபவன் போல வந்தான் அங்கே தலைவியை காண்கிறான்.

**கண்ணோடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்**

**என்ன பயனும் இல"5**

என்றபடி இருவர் விழிகளும் சந்திக்கின்றன. இருவர் இதயமும் ஒன்று படுகின்றன. அச்சமயம் உள்ளத்து தோன்றும் இன்ப உணர்ச்சியே அவர்தான் காதல் வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்றது.

**"கயமலர் உன் கண்ணாய்! காணாய் ஒருவன்**

**வயமான் அடித்தேர்வான் போல, தொடைமாண்ட**

**கண்ணியன் வில்லன் வரும்: என்னை நோக்குபு**

**................**

**சேயேன்மன் யானும் துயர் உழைப்பேன்"6**

தலைவனைப் பார்த்த நாள் முதலாய் அவனை நினைத்து துயர் அடைகிறாள் தலைவி. தலைவன், தலைவியின் வாழ்க்கை களவிலேயே நடந்து வருகிறது. இக்களவு வாழ்க்கையை தலைவியிடம் காணப்படும் பல்வேறு மாறுபாடுகளாலும், தன் உணர்வினாலும், மதிநுட்பத்தினாலும் தோழி ஆராய்ந்து அறிகின்றாள். களவு வாழ்க்கை சிறப்பாக நீட்டிக்க தோழி துணையாக நிற்கிறாள். தோழியின்

துணையின்றி களவு வாழ்க்கை ஒரு நாள் கூட நீட்டிக்காது. தலைவன் விரைவில் தலைவியை மணந்து கொள்ளும் பொருட்டு பகல் வருகின்றவனை இரவில் வருக என்றும் இரவில் வருகின்றவனை பகலில் வருக என்றும் கூறி அவனை பலவாறு அலைக்கழிப்பாள். களவு கற்பாக மாறுவதற்கும் தோழியே துணையாகிறாள். இவ்வாறு களவு வாழ்க்கையில் தோழி இன்றியமையாத பங்கினை வகிக்கின்றாள்.

**உயரிய காதல் நிலை**

தலைவன், தலைவி மீது கொண்ட உயரிய காதல் திறத்தினை தலைவிக்கு உணர்த்துவது தோழியின் கடமையாகும். தலைவன் குறித்த நேரத்தில் வராத பொழுது தலைவி, தலைவனை பழித்துக் கூறுகிறாள். அப்போது தோழி அவனைப் புகழ்ந்து அவனது நற்குணங்களையும், வாய்மையையும் சிறப்பாக எடுத்துரைக்கிறாள்.

**"பொய்த்தற் குரியனோ? பொய்த்தற்கு உரியனோ?**

**'அஞ்சல் ஓம்பு' என்றாரைப் பொய்த்தற்கு உரியனோ?**

**........................**

**வாராது அமைவானோ? வாராது அமைவானோ?**

**வாராது அமைகுவான் அல்லன் - மலை நாடன்**

**.................**

**தொடர்புள் இனையவை தோன்றின் விசும்பில்**

**சுடருள் இருள் தோன்றியற்று "7**

திங்களுள் தீ தோன்றுவதும், நீருள் குவளை மலர் வெந்து போதலும், சுடருள் இருள் தோன்றுவதும் நடக்க இயலாத செயல்கள் போன்று தலைவன், தலைவி மீது கொண்ட காதல் பொய்யாவதும் இயலாத ஒன்றாகும் என தலைவனின் உயரிய காதல் நிலையை கபிலர் சிறப்பாகக் காட்டியுள்ளார். சங்க இலக்கியப் பாடல்களில் எந்த இடத்திலும் பொய்யான காதல் நிலையினை காண இயலாது. அன்றைய காதல் உயரிய ஒப்பற்ற காதலாகும். தன்னைச் சார்ந்தோரின் மனம் புண்படாது, அவர்களை துன்புறுத்தாது வாழும் ஒழுக்கநெறி அவர்களது வாழ்வில் சிறப்புற்றிருந்தது. எத்தகைய இடர்பாடுகள் நேர்ந்த போதிலும் காதலை நன்னெறியில் நடத்தி, காக்கும் திறன் போற்றுதற்குரியதாய் திகழ்ந்தமையை குறிஞ்சிக்கலியின் வழி உணர முடிகின்றது. இதே போன்று குறிஞ்சிப் பாட்டில், வரும்

**"ஈர நன்மொழி தீரக் கூறித்**

**துணைபுணர் ஏற்றின் எம்மொடு வந்து**

**.................................,....**

**இளமையின் இகந்தன்றும் இலனே வளமையில்**

**தன்னிலை ை இலனே"8**

என்ற அடிகளும் தலைவனின் உயரிய பண்பினை வெளிப்படுத்துவதாய் அமைகின்றன. இவற்றின் வழி, சங்க காலத்து உயரிய உண்மையான காதல் வாழ்க்கையை அறியமுடிகின்றது.

**அலர்**

தலைவன் தலைவியின் களவு நிலைையை அறிந்த ஊரார் அவர்களை பழிதூற்றிப் பேசுவது அலராகும். ஊரார் தமக்குள் பேசிக்கொள்வது அம்பல் என்றும் வெளிப்படையாகப் பேசுவது அலர் என்றும் கூறப்படும். **"ஐந்திணை இலக்கியத்துக்கு அழகு செய்பவர் உள்ளூர்ப் பெண்டுகள். அவரின்றேல் அவ்விலக்கியம் உப்பின்றியிருக்கும். அல்லது செய்தல் ஓம்புமின் என்பதற்கு நேர்மாறாக ஊர்ப் பெண்டிர் செய்வது அல்லதேயாயினும், சமுதாய நெறிக்கு நல்லது என்ற கருத்தால் தமிழ்ச்சான்றோர் ஊராரையும் அகத்திணை இலக்கியத்திற்குப் போற்றிக் கொண்டனர். களவிலும், கற்பிலும் ஊரார்க்கு இடனுண்டு"9** என்று ஊராரின் அலர் களவில் நன்மையையும் செய்யக்கூடியது என்று வா.சு.ப. மாணிக்கனார் கூறுகின்றார். குறிஞ்சிக்கலியில்,

**"ஊர் அலர் தூற்றலின் ஒளிஒடி நறுநுதல்**

**பீர் அலர் அணி கொண்டு பிறை வனப்பு இழவாக்கால்"10**

என்றும் அமையும் பாடல் வரிகளால் ஊராரின் அலருக்கு நாணுபவர்கள் பெண்களே என்பதையும், அலரால் தலைவி அடையும் பலவித துன்பங்களையும் அறியலாம்.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் புறப்பாடல்களை விட அகப்பாடல்களே மிகுதியாக உள்ளன.இவற்றில் குறிஞ்சிக்கலி சிறப்பானதொரு இடத்தைப் பெற்றுள்ளது. தலைவன், தலைவியின் உள்ளப்புணர்ச்சியே களவு வாழ்க்கைக்கு அடிப்படையாகிறது. அதன்பின் பகற்குறியிலும், இரவுக்குறியிலும் சந்தித்து களவை நீட்டிக்கின்றனர்.பின்னர் தோழி அறத்தோடு நிற்க களவு, கற்பாக மாறுகிறது. இதற்கென ஒரு வரையறுக்கப்பட்ட நெறியை வகுத்துக்கொண்ட பெருமைக்குரிய இனம் தமிழினமாகும். குறிஞ்சிநில மக்களின் திருமணமுறை, அவர்களது பண்பாட்டு வெளிப்படையாக அமைந்துள்ளது. சங்க இலக்கியத்தில் உள்ள நான்கு கைக்கிளைப் பாடல்களில் மூன்று பாடல்கள் குறிஞ்சிக்கலியிலேயே அமைந்துள்ளன. மேலும் பெருந்திணைப் பாடலும் இதில் இடம் பெற்றுள்ளது. தொல்காப்பியரின் அகவாழ்க்கை நெறி கோட் பாடுகளுக்கு இணங்க கலித்தொகையும், குறிப்பாக குறிஞ்சிக்கலியும் அமைந்துள்ளமையை உணரமுடிகிறது.

**அடிக்குறிப்பு**

1. இளம்பூரணர் (உ.ஆ)தொல்காப்பியம், பொருளதிகாரம்,நூ.1

2.மேலது, நூ.89

3. முனைவர் ச. திருஞானசம்பந்தம்( உ.ஆ)அகப்பொருள்  விளக்கம்,நூ.117

4. டாக்டர் ரா. சீனிவாசன், தமிழ்ப் பாவியல்,ப.159

5. பரிமேலழகர்( உ.ஆ) திருக்குறள்,கு.1100

6. முனைவர் ஆ. விசுவநாதம் (உ.ஆ), கலித்தொகை மூலமும் உரையும்,பா.37,வரி.1-7

7.மேலது,பா.41,வரி.21-24, 28-31, 35-38

8. முனைவர் இரா.மோகன் (உ.ஆ) பத்துப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, வரி வரி. 234-245

9. வ.சு.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.53

10. முனைவர் அ.விசுவநாதம்  (உ.ஆ) கலித்தொகை மூலமும் உரையும், பா.53, வரி.14-15

**Copyright & License:**

© Authors retain the copyright of this article. This work is published under the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), permitting unrestricted use, distribution, and reproduction in any medium, provided the original work is properly cited.